RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21124

# தகவல் தொடர்பியல் மேலாண்மைக் கோட்பாடும் சிலப்பதிகார நெறிகளும்

## எல்.எம். ஸவர்ணலதா [அ,*]

[அ] ஆங்கிலத்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு-12, தமிழ்நாடு, இந்தியா.

# Communication Management Theory and Norms in Silappathikaram

## L.M. Swarnalatha [a,*]

[a] Department of English, Vellalar College for Women, Erode - 638 012, Tamil Nadu, India.

Corresponding Author: swarnalathalm@gmail.com

Received : 09-11-2020
Accepted : 20-01-2021

**ABSTRACT**

Literature is the mirror – image of human life and only literature can reflect the antiquity and the tradition of a language. Silappathikaram registers a variant of information management technology and the integrated communication as a part of administrative management in terms of planting, implementing, supervising and exhibiting the ways of external and internal functioning of an organization. Information of any kind is to be transferred at the right time to the right person and this principle is reflected in Silappathikaram, which has to be intersected in today's information technology and one is expected to adjudge the best between the two and practice it judiciously.

**Keywords:** Silappathikaram, Administrative Management, Literature, Human life

## முன்னுரை

இலக்கியங்கள் மானுட வாழ்வைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. ஒரு மொழியின், ஒரு இனத்தின் தொன்மையையும் மரபையும் இலக்கியங்கள் வழியாக அறிய முடிகின்றது. தமிழில் முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், பொது மக்கள் காப்பியம், உரையிடையிட்டப் பாட்டுடைச் செய்யுள் என்றெல்லாம் பாராட்டப்படும் இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட தமிழ் முதற்காப்பியமாம் சிலப்பதிகாரம். இக்காப்பியத்தில் காணலாகும் தகவல் தொடர்பியல் மேலாண்மைக் கோட்பாட்டையும் நெறியையும் பின்னைக் கருத்தாக்கமான நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாட்டுச் செயற்பரப்புகளில் ஒன்றான தகவல்தொடர்பியல் கோட்பாடு விரவியுள்ள பாங்கினை ஆராய்வதே இவ்வாய்வின் முக்கியப் பண்பாகும்.

## நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடு

மேலாண்மை என்றால் ஊழியர்களைக் கொண்டு ஒரு செயலைச் செய்வது தொடர்பான ஆற்றுப்படுத்தல் என்று மேரி பார்க்கர் ஃபால்ட் வரையறை செய்கிறார். நடைமுறையில் மேலாண்மை என்பதும் நிர்வாகம் என்பதும் ஒத்தக் கருத்தினில் கையாளப்படுகிறது. ஆனால் நிர்வாகம் என்பது மேலாண்மை என்னும் களத்தின் ஒரு அங்கமாகும். நிர்வாகவியல் மேலாண்மை என்பது ஒரு பணியைச் செய்து முடிப்பதாக இல்லாமல், அப்பணியை யார் செய்வார்கள் என்றறிந்து சரியான பாதையில் உரிய முறையில் அவர்களை ஒருங்கிணைத்து குறித்த காலத்தில் அப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதைக் குறிக்கிறது.

நிர்வாகவியல் மேலாண்மை என்பது கணித்தல், திட்டமிடுதல், திரட்டுதல், ஆணையிடல், இயைபாக்குதல், கட்டுப்படுத்தல் ஆகிய படிநிலைகளைக் கொண்டது. பல்வேறு கட்டமாகப் பணிகளை நெறிப்படுத்தும் முறைமைகளை உள்ளடக்கி, பல்வேறுபட்ட செயற்பரப்புகளாக விரிவடைகிறது.

## மேலாண்மையின் வகைகள்

கணக்கியல் மேலாண்மை, கலை மேலாண்மை, கட்டுப்பாட்டு மேலாண்மை, திட்டமேலாண்மை, அழுத்த மேலாண்மை, திறன் மேலாண்மை, தரமேலாண்மை, உற்பத்தி மேலாண்மை, நிதி மேலாண்மை, செயல்முறை மேலாண்மை, அமைப்பு மேலாண்மை, தகவல் தொடர்பியல் மேலாண்மை, தகவல் தொழில்நுட்ப மேலாண்மை என மேலாண்மைச் செயற்பரப்புகளின் அடிபடையில் வகைகள் விரியும்.

## தகவல் தொடர்பியல் மேலாண்மை

நிர்வாகத்தின் செயற்பாடுகளைச் செம்மையாக நெறிப்படுத்துவதற்குத் தகவல் தொடர்பு அவசியமாகும். தகவல் தொடர்பு பற்றிய அனைத்துக் கூறுகளையும் நுட்பமாகவும் ஆழமாகவும் பேசும் ஒரு பிரிவாகத் தகவல் தொடர்பியல் மேலாண்மை அமையும். திட்டமிடல், செயற்படுத்துதல், மேற்பார்வையிடுதல், நிறுவனத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எல்லா வகையிலும் தகவல்களை வெளிப்படுத்துதலுக்கான முறைமைகளைக் கையாளுதல் ஆகிய கூறுகளை உள்ளடக்கியது. ஒரு நிறுவனத்தின் தகவல் தொடர்பை உருவாக்குதல், அத்தொடர்பின் சார்பான பல்வேறு படிநிலைகளை வடிவமைத்தல், உள் மற்றும் வெளியேயான தொடர்புகளைச் சாத்தியப்படுத்துதல், சொல்லவேண்டிய தகவல்களை இடையூறின்றி வெளிப்படுத்துதல் முதலியன பல்வேறு கூறுகளாகும். இவை ஐந்து வினாக்களை உள்ளடக்கியது

1. திட்டத்திற்கும் நிர்வாகத்திற்கும் உள்ளேயும் வெளியேயும் சொல்ல வேண்டிய தகவல்
2. யாருக்குத் தகவல் தேவை?

3. எப்பொழுது தகவல் தேவையாக இருக்கிறது?
4. தகவலின் வடிவம் என்ன?
5. தகவலைத் திரட்டி பிறரிடம் கொண்டு செல்பவர் யார்?

இவ்வைந்து வினாக்களும் வெற்றிக்கு அடித்தளமாக அமைவன. நிர்வாகத்தின் செயற்பாடுகளை அதிகரிக்கவும், தவறுகளைத் திருத்திக் கொள்ளும் அனுபவப் பாடமாகவும் அமைகின்றன (Kritinasamy, 2012).

## திட்டத்திற்கும் நிர்வாகத்திற்கும் உள்ளேயும் வெளியேயும் சொல்ல வேண்டிய தகவல்

சிறப்பான நிர்வாகத்தின் செயற்பாட்டிற்குச் சரியான, உண்மையான தகவலைத் தக்கவரிடத்துத் தெரிவிப்பது முதன்மையானச் செயலாகும்.

சிலப்பதிகாரத்தில் சோழ நாட்டின் தலைநகராகிய புகாரில் கருப்பெற்ற கதை, மதுரையில் உருப்பெற்று உச்சநிலையையடைந்து வஞ்சியில் காப்பிய நோக்கம் நிறைவேறும் நிலையில் கதையோட்டம் அமைந்துள்ளது. வழக்குரைக்காதையில் தகவல் தொடர்பு நேரிடைத் தொடர்புடையதாக அமைந்து காப்பியத்திற்கு ஒரு திரும்பு முனையைக் கொடுக்கிறது. கண்ணகி வாயிற் காவலனுடன் 'வாயிலோயே அறியவிப்பாயே' என்று உரையாடுவது, அவனிடம் ஏற்பட்ட மாற்றங்கள், காவலன் அரசனிடம் 'வாழி எம் கொற்கை வேந்தே கடையகத்தாளே" என்று அறிவிப்பது, மன்னனின் வருக ஈங்கு, என்றுகூற காவலன் வாயில் கோவில் காட்ட நீர்வார் கண்ணை மடக்கொடியோய்! மன்னன் கேட்க தேரா மன்னா! என்று கண்ணகியும் உரையாடி நீதி கேட்டு சிலம்பை உடைத்து மன்னனின் தவறினைச் சுட்டிக்காட்டித் தன் தவறு உணர்ந்து தன் இன்னுயிர் நீத்தான் பாண்டிய மன்னன். தகவல் மேலாண்மையின் உச்சநிலையினை அறியலாம் அதே போலகாட்சிக் காதையில் குறவர்கள் கான வேங்கையின் கீழ்க் கண்ணகியை வானவர்கள் அழைத்துச் சென்ற நிகழ்ச்சியை நோக்கும் போது அங்கும் தகவல் பரிமாற்றத்தைக் காணலாம். அதனால் அரசியலில் ஏற்பட்ட மாற்றமும் கண்ணகிக்கு கோவில் அமைத்த பாங்கும் புலப்படும் (Ilango Adigal, 2016).

## யாருக்குத் தகவல் தேவை?

தகவல் எது? தகவலை யாரிடம் கூறலாம்? ஏன்பது அடுத்த முக்கிய கட்டம். சிலப்பதிகாதையில் கானல் வரியில் கோவலன் மாதவியை விட்டு பிரிந்து சென்ற போது தன் துயரத்தினை யார் மூலம் எப்படி யாருக்குத் தெரிவிக்கலாம் என்று தவித்த போது அவளுக்குக் கிடைத்தவர் கோசிகாமணி என்ற அந்தணன். புகார் காண்டத்தில் குறையுடையவனாக இருந்த கோவலன் மதுரைக் காண்டத்தில் அந்த குறை நீங்கி நிறை உடையவனாக ஆனான். மாதவிக்குத் தன் மீது தவறில்லை என்பதனைத் தெரிவவிக்க ஒரு தகவல் தொடர்பு தேவை. அந்த தேவையைப் பூர்த்தி செய்ய வந்தவர் தான் கோசிகமணி.

மூன்று காதையிலும் தகவலைச் சரியாக தெரியப்படுத்துபவர். நீர்ப்படைக் காதையில் சேரன் செங்குட்டுவனுக்கு கதாப்பாத்திரங்கள் அனைவருடைய முடிவினையும் தெரிவித்துக் கதையினை முடிவுக்குக் கொண்டு வருபவர் கோசிகமணி. இங்கு கோவலனுக்கும், சேரன் செங்குட்டுவனுக்கும் தகவல் தேவை.

## எப்பொழுது தகவல் தேவையாக இருக்கிறது?

தகவல் தொடர்பு மேலாண்மையில், தகவல் என்பது சரியான காலத்தில் தக்கவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். இதனை

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்**

என்ற திருக்குறள் எடுத்துரைக்கிறது.

கோபம் காரணமாக ஒருவரைப் பிரிந்து வெகுதொலைவு சென்ற நிகழ்வின் உண்மை நிலையை உணர்ந்து அவர்களுடைய மனநிலையை அறியும் ஆவல் தூண்டும் போது தகவல் தேவையாக இருக்கிறது என்பதை கோவலன் மாதவியைப் பிரிந்து குலப்பிராட்டியோடு மதுரை மாநகருக்குச் சென்ற போது தன்னுடைய முதுபெரும் குரவர்கள் மற்றும் மாதவி பற்றிய தகவலை அறிந்து கொள்ள விரும்புகிறான். அதனால் மாடலமறையோன் மாதவிக்கொடியைப் பார்த்து 'கோவலன் பிரியக் கொடுந் துயரெய்திய மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ் அருந்திறல் வேனிற் வருந்தினை போலுநீ மாதவி' என்று கூறியவுடன் பதறி யாது கூறினாய் என்று கோவலன் கேட்டது கோவலனின் தகவல் தேவையினை அறிய முடிகிறது (Thiruvalluvar, 2016).

வஞ்சிகாண்டத்தில் சேரன் செங்குட்டுவன், வேய்மாளிடம் குன்றக்குறவர்கள் கூற சாத்தனார் கண்ணகியின் வரலாற்றினை எடுத்துக்கூறினார். கற்புடை தெய்வத்திற்குக் கோயில் எழுப்பும்படி கூற மேலும் தகவல் அறிய விரும்பியபோது மாடலமறையோன் தோன்றி புகார்க் காண்டத்து நிகழ்வுகளை, காடு வழி மதுரைக்குக் கோவலன் கண்ணகி வந்ததை அதன் நடந்த செய்திகளைத் தெளிவாக எடுத்துக்கூறியவுடன் 'இமயத்தில் கல் எடுத்து கங்கை காவிரியில் நீப்படை செய்து கண்ணகிக்குச் சிலை வடிக்க உறுதிபூண்டனன்" என்று காப்பியம் பகர்கிறது. இங்கு சேரன் செங்குட்டுவனுக்குத் தகவல் தேவைப்படுகிறது.

## தகவலின் வடிவம்

தகவல் தொடர்பு மேலாண்மையில் தகவலின் வடிவம் என்ன? தக்க தகவலை வாய்மொழியாகவோ, கடிதம் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவே வெளிப்படுத்துவர். தூதுவர் மூலம் கடிதம் அனுப்பித் தகவல் தெரிவிக்கும் முறை சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது. கடிதம் 'திருமுகம்' என்றும் 'முடங்கல்' என்றும் குறிப்பிடப்படுகிறது. மாதவி என்கிற பாத்திரம் ஈராயிரம் ஆண்டு முன்னர் இருந்த சமூக வாழ்க்கையில் கணிகையின் பாத்திரம். அக்கடிதத்தைப்போல் இனியொரு கடிதத்தினை யாராலும் எழுதமுடியாது.

கோவலன் தன்னைப் பிரிந்தவுடன் தோழி வசந்தமாலையிடம் முதற்கடிதத்தை கொடுத்து அனுப்பி வைக்கிறாள் கோவலன் அக்கடிதத்தை வாங்க மறுத்துவிடுகிறான். கடிதத்தைச் சண்பகம், பச்சிலை, பித்திகை, வெள்ளை மல்லிகை என்னும் மலர்களாலும், வெட்டிவேராலும் அழகிய செங்கழுநீரின் நெருங்கிய இதழ்களாலும் தொடுக்கப்பட்ட மாலையின் நடுவில் முதிர்ந்த தாழாம்பூவின் வெள்ளிய தோட்டில் பித்திகையின் செழித்த முகையாகிய எழுத்தாணியைக் கொண்டு செம்பஞ்சுக் குழம்பில் தொய்த்துஉதறிக் கடிதம் எழுதினாள். இளவேனிற் காலத்தில் உயிர்கள் எல்லாம் தத்தம் துணையுடன் வாழ்கின்றன. எனவே கோவலனும் தன்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று தன் உள்ளக்கருத்தைத் தெரியப்படுத்தினாள்.

இரண்டாவது கடிதம் கோசிகமணி என்றும் மாடலமறையோன் என்றும் அழைக்கப்படும் அந்தணரிடம் கொடுத்து கோவலனிடம் சேர்க்கச் செய்தாள்

**'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்**
**வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்**
**குரவர்பணி அன்றியுங் குலப்பிராட்டியோ**
**டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது**
**கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்**
**பொய்தீர் காட்சிப் புரையோர் போற்றி'**

இக்கடிதம் மாதவி கோவலனுக்கு எழுதினாலும் கோவலனின் தாய் தந்தைக்கும் பொருந்துவதால் அதனை தன் பெருமுது குரவர்களிடம் சேர்க்கும்படி மாடலமறையோனிடம் திரும்பிக் கொடுக்கிறான்.

தகவல் தொடர்பு என்பது தொடர்பு வழியாக ஏற்படும் செயல் எதிர்ச்செயல் என்ற லாங்செர்க்சின் கூற்று நினைவு கூரத்தக்கது. (வெ.கிருட்டியசாமி, தகவல் தொடர்பியல் ப.16)

மேலும் ரொல்டுலாங்வெல் என்பவர் செய்தித் தொடர்பு முறையை விளக்கும்போது தொடர்பு நிகழ்வதில் பெறுநரின் மனநிலை முக்கிய இடத்தினைப் பெறுகிறது. மாதவியின் முதல் கடிதத்தைப் பெறும்போது நல்ல மனநிலையில் இல்லாததால் முடங்கலைப் பாராமலே அனுப்பி விடுகிறான். இரண்டாவது கடிதத்தைப் பெறும் போது அவனது மனம் குழப்பம் நீங்கி தெளிவு பெற்ற நிலையில் இருந்ததால், கைவிடல் ஈயானாகிக் கடிதத்தைப் பெற்றுப் பெற்றோர்க்கு அனுப்பி வைக்கிறான்'.

## ஓலை

மன்னர்கள் தகவலை ஓலையில் எழுதி அனுப்பி வைத்தார்கள். சேரன் செங்குட்டுவன், 'தென்றமிழ் நன்னாட்டுச் செழுவற் கயிற் புலி மண்டலையேற்ற வளர்க ஈங்கு" எனக் குறிப்பிடுவதிலிருந்து இலச்சினை பொறித்த ஓலைகள் தகவல் பரிமாற்றத்திற்குப் பயன்பட்டதை அறியலாம்.

## ஒற்றர்கள்

அன்றிலிருந்து இன்று வரை பிற நாட்டின் செய்திகளை ஒற்றர்கள் மூலமோ அறிந்து கொள்ள முடிகிறது. உள்நாட்டு ஒற்றர், வெளிநாட்டு ஒற்றர் என வகையினர் இருந்தார்கள். சிலப்பதிகாரத்தில் வெளிநாட்டு ஒற்றர்கள் இருந்ததை,

**நாவிலந்தன் பொழில் நண்ணார் ஏற்றுநம்**
**காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா(காட்சி 172-173)**
**வம்பணியானை வேந்தர் ஒற்றே**
**தஞ்செவிப்படுக்குந் கமைமைய அன்றோ அறைபறை'**

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

## தகவலைத் திரட்டி பிறரிடம் கொண்டு செல்பவர்

தகவல் தொடர்பு மேலாண்மையியல் கோட்பாட்டின் அடிப்படையில் பதிவு செய்ய வேண்டிய தகவல் நிர்வாகத்தின் கீழ்நிலையிலிருந்து ஒவ்வொருவராக மேலாளர் வரையிலான தொடர்ந்த செயல்முறையாக அமைதல் வேண்டும். இளங்கோவடிகள் தகவலைத் திரட்டி பாத்திங்கள் மூலம் முறைப்படி தெரியப்டுத்துகிறார்.

## முடிவுரை

இலக்கியத்தோடு பிறதுறைக் கோட்பாடுகளை இணைத்துப் பார்க்கும் பான்மை ஒப்பியல் ஆய்வு எனப்படும் புதிய ஆய்வுமுறையாகும். அப்பான்மையில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாட்டின் பல்வேறு செயற்பரப்புகளில் ஒன்றான தகவல் தொடர்பியல் மேலாண்மைக் கோட்பாட்டினை நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் பொருத்தி அன்றைய தகவல் மேலாண்மையை இன்றைய தலைமுறையினர் அறிந்து இன்றைய காலக்கட்டத்தில் அறிவியலால் தகவல் தொடர்பு அடைந்த மாற்றத்தினையும் அறிந்து எது சிறந்ததோ அதைக் கடைபிடித்து செம்மையான வாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

## References

Kritinasamy, V., (2012), Thagaval Thodarbiyal, Manivaskar Publishing, Chennai, India.
Thiruvalluvar, (2016), Thirukkural, New Century Book House, Chennai, India
Ilango Adigal, Alain Daniélou (Translator), (2016), Shilappadikaram - First edition, Aleph Book Company, New Delhi, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License